# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,திருச்செந்தூர்

தூத்துக்குடி மாவட்டம்

திருக்கோயில் பாதுகாவலர் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டு உறை முறை)

ந.க.எண்:314/2021/அ2-1 நாள்: 25.01.2021

---

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் கீழ்க்காணும் இடங்களில் (**Securities**) பாதுகாவலர்களை நியமித்து பணி செய்ய முன் அனுபவம் உள்ள **I.S.O.** தரச்சான்று பெற்ற தனியார் நிறுவனங்களிடமிருந்து இரண்டு உறை முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் இடம் : கோவிந்தம்மாள் திருமண மண்டபம்

நாள்/நேரம் : 12.02.2021 பிற்பகல் 1.00 மணி முதல்

| | | |
|---|---|---|
| 1. | பாதுகாவலர் பணிபுரிய வேண்டிய இடங்கள் | திருக்கோயில் உள்துறை மற்றும் திருக்கோயில் வளாகம் மற்றும் உபகோயில்கள் |
| 2. | பணிபுரிய வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை | பாதுகாவலர்கள் எண்ணிக்கை - 107 (நூற்று ஏழு மட்டும்)<br>மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை - 05 (ஐந்து மட்டும்)<br>உதவி மேலாளர் – **01** (ஒன்று மட்டும்) |
| 3. | ஒப்பந்தப்புள்ளி காலம் | உத்தரவு தேதி முதல் ஓராண்டு காலம் முடிய |
| 4. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் நாள் மற்றும் நேரம் | 01.02.2021 முதல் 10.02.2021 முடிய மாலை 5.45 மணி வரை (அலுவலக வேலை நேரத்தில் மட்டும்) |
| 5. | ஒப்பந்தப்புள்ளி தொடர்பான முன் ஏலக் கூட்டம் (**Pre – bid Meeting**) நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் | இணை ஆணையர்/செயல் அலுவலர் அலுவலகம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருச்செந்தூர்,<br>05.02.2021 மாலை 4.00 மணி |
| 6. | ஒப்பந்தப்புள்ளி வரவேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 11.02.2021 காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை |
| 7. | ஒப்பந்தப்புள்ளி தகுதிகாண் படிவம் (**Technical bid**) திறக்கும் நாள் நேரம் | 12.02.2021 பிற்பகல் 1.00 மணி |
| 8. | ஒப்பந்தப்புள்ளி விலை விகித படிவம் (**Financial bid** ) திறக்கும் நாள் நேரம் | 12.02.2021 பிற்பகல் 3.00 மணி முதல் |
| 9. | ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை (தகுதி படிவத்துடன் இணைக்க வேண்டும்) | ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம்) |
| 10. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |

ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகை “இணை ஆணையர்/செயல் அலுவலர்” அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் என்ற பெயரில் திருச்செந்தூர் வங்கி கிளையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையாக ஒப்பந்தபுள்ளி தகுதி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

...2

ஒப்பந்தக்காரா் அவா்தம் பதிவு பெற்ற சான்றிதழ்கள் பதிவு நடப்பில் உள்ள சான்றிதழ்கள் பணி முன் அனுபவ சான்றிதழ்கள், வருமான சான்றிதழ்கள், வங்கி வரைவோலை முதலியவற்றை முதல் உறையிலும், முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட தொகை குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம், (**PRICE BID**) ஆகியவற்றை இரண்டாவது உறையிலும் வைத்து இரண்டு தனித்தனி உறைகளை ஒரே நேரத்தில் சமா்ப்பிக்க வேண்டும். இதர விவரங்களை திருக்கோயில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள்

(1) ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரா் ஒரு நிறுவனமாக (**Firm**) இருக்கவேண்டும் அல்லது கூட்டு நிறுவனமாக (**Consortium of Firm)** இருக்கவேண்டும்.

(2) வருடம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூபாய் மூன்று கோடிக்கு குறைவில்லாமல் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு (2017–2018 ,2018-2019, 2019-2020) வரவு செலவு செய்ததற்கு பட்டய கணக்கரிடம்(**Chartered Accountant**) சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளில் **I.T.Return** தாக்கல் செய்த ஆவணங்கள் சமா்ப்பிக்க வேண்டும்.

(3) ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் பதிவு சான்று சமா்ப்பிக்க வேண்டும்.

(4) தேசிய மயமாக்கப்பட்ட வங்கி, அல்லது வருவாய் துறையினரிடமிருந்து ரூ20/- இலட்சத்திற்கான சால்வன்சி சான்று அசல் (**SolvencyCertificate)** இணைக்கப்பட வேண்டும்.

(5) **ISO** தரச்சான்று பெற்ற நிறுவனத்தினா் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

(6) பாதுகாப்பு பணி நிறுவனம் தமிழக காவல்துறையில் பதிவு செய்திருக்க வேண்டும். பதிவு செய்ததற்கான சான்று சமா்ப்பிக்க வேண்டும்.

(7) **EPF, ESI** மற்றும் **GST** வரி செலுத்துவதற்கு பதிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் (நகல் இணைக்கப்பட வேண்டும்)

(8) **EPF, ESI** மற்றும் **GST**அலுவலகத்தில் விதிகளின்படி தொகை செலுத்தி மாதா மாதம் பட்டியலுடன் சான்று சமா்ப்பிக்க வேண்டும்.

(9) வருமான வரித்துறை வழங்கிய நிரந்தர கணக்கு எண் (**PAN** ) அட்டையின் நகல் இணைக்க வேண்டும்.

(10) ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படும் மாத ஊதியம், **EPF**,**ESI, GST, Service Tax** விபரங்கள் தற்போதைய விதிகளின்படி (**Break up figures)** திருக்கோயில் சார்பாக செலுத்த வேண்டிய பங்கு, போனஸ் ஆகியவை தனித்தனியே கணக்கிட்டு (**Breakup figures)** ஒப்பந்தப்புள்ளி விலை விகித படிவத்தில் சமா்ப்பிக்கப் படவேண்டும். **GST** வரி குறிப்பிடப்படவேண்டும்.

(11) பாதுகாவல் பணிபுரியும் பணியாளா்களுக்கு வழங்கப்படும் ஊதியம், குறைந்தபட்ச ஊதிய விதிகளின்படி கண்டிப்பாக அமைய வேண்டும். அனைத்து ஒப்பந்த பணியாளா்களுக்கும் ஒரே வங்கியில் கணக்கு துவங்கி **ECS** மூலம் சம்பளத் தொகை பட்டுவாடா செய்யப்பட வேண்டும். சம்பளம் வழங்கப்பட்ட வங்கி மூலம் உரிய தொகை பணியாளா்களுக்கு பட்டுவாடா செய்யபட்டதற்கான வங்கி ஒப்புதல் விவரத்தினை பிரதி மாத பட்டியலுடன் ஒப்பந்ததாரா் இணைக்க வேண்டும்.

…3

(12) ஒப்பந்த நிறுவனத்தின் மீது பணிக்குறைபாடு தொடர்பான வழக்குகள் இல்லை என நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டக் காவல்துறையில் சான்று பெற்று இணைக்க வேண்டும்.

(13) பாதுகாப்பு நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாள் ஒன்றுக்கு இருநூறு பணியாளர்களை தமிழக திருக்கோயில்களில் அல்லது அரசுத்துறை, அரசு சார்ந்த நிறுவனங்களில் பணியமர்த்தியதற்கான உத்தரவு மற்றும் ஒப்பந்தப்பத்திர நகல் இணைக்கப்பட வேண்டும்.

(14) கடந்த 5 வருடங்களில் திருக்கோயில் ஒப்பந்தங்களில் இடைநீக்கம் / தகுதி இழப்பு செய்யப்பட்ட நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை.

(15) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல.

(16) பாதுகாவலர் பணி ஒப்பந்தம் இத்திருக்கோயிலுக்கு தேவையில்லை என திருக்கோயில் நிர்வாகம் கருதும் பட்சத்தில் ஒப்பந்தத்தை ஒரு மாத முன்னறிவிப்புடன் முடிவுக்கு கொண்டுவர இத்திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. இதனை ஆட்சேபிக்க ஒப்பந்தக்காரருக்கு உரிமையில்லை.

(17) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு உறை முறையில் தகுதிக்கு ஒரு உறையும். தொகை விபர்திற்கு ஒரு உறையும் தனித்தனியாக எழுதி கொடுக்க வேண்டும். அத்துடன் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூபாய் இரண்டு லட்சத்திற்கான பண வரைவோலையை ஒப்பந்தப்புள்ளி தகுதி படிவத்துடன் (உறை-1) இணைத்து மூடி முத்திரையிட்டு வைக்க வேண்டும்.

(18) தகுதி சம்பந்தப்பட்ட உறையில் தகுதி சம்பந்தப்பட்ட உறை என்றும், தொகை சம்பந்தப்பட்ட உறையில் தொகை சம்பந்தப்பட்ட உறை என்றும் உறையின் மேல் கண்டிப்பாக குறிப்பிடப்பட வேண்டும். மேற்படி இரண்டு உறைகளையும், ஒரே உறையில் வைத்து கொடுக்க வேண்டும்.

(19) முதலில் தகுதி சம்பந்தப்பட்ட உறை திறக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தகுதி நிர்ணயிக்கப்படும். தகுதியில்லாத நிறுவனங்களின் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது பின்னர். தகுதியான நிறுவனங்களின் தொகை சம்பந்தப்பட்ட உறையினை திறந்து பரிசீலிக்கப்படும்.

(20) டெண்டர் நிபந்தனைகளின்படி குறைவான சதவிகிதம் சேவை கட்டணமாக குறிபபிட்டுள்ள ஒப்பந்ததாரர் **L1** என முடிவு செய்யப்பட்டு தேவைப்படின் விலைக்குறைப்பு பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும். (**The tenderer who has quoted lowest percentage of salary and service charges will be declared as L1 and will be called for rate negotiations if necessary**).

(21) ஒன்றுக்கு மேற்ப்பட்ட நிறுவனங்கள் ஒரே ஒப்பந்தத் தொகையை குறிப்பிட்டிருந்தால் திருக்கோயில் நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானது.

(22) ஒப்பந்தக்காரர்களால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் நல்ல திடகாத்திரமாகவும், நல்ல உடற்கட்டுடனும், மற்றும் உயரம் 165 செ.மீ. க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(23) ஒப்பந்தகாரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் குறைந்த பட்சம் கல்வித்தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(24) ஒப்பந்தக்காரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் பாதுகாப்பு பணியில் முன் அனுபவம் பெற்று இருக்கவேண்டும். பாதுகாவலர்கள் பணி நோத்தில் திருக்கோயில் வளாகத்தில் மது அருந்தவோ, சீட்டு விளையாடவோ, புகை பிடித்தல், செல்போன் பயன்படுத்தவோ உள்ளிட்ட பணிக்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

(25) ஒப்பந்தக்காரரால், பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் 25 வயது முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

(26) ஒப்பந்தக்காரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் பணிகளை கண்காணிக்க **Assistant Manager** ஒரு நபரை நியமிக்க வேண்டும். **Assistant Manager** ன் குறைந்த பட்ச கல்வித்தகுதி பட்டப் படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்,

(27) ஒப்பந்தக்காரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்களின் பணிகளை மேற்பார்வையிட மேற்பார்வையாளர்களாக 5 நபர்களை நியமிக்க வேண்டும். மேற் பார்வையாளர்களின் குறைந்த பட்சம் கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(28) ஒப்பந்தக்காரர் 2 வருடங்களில் எந்த ஒரு வாடிக்கையாளராலும் தண்டிக்கப்பட வில்லை என்பதற்கு முத்திரைதாளில் பிரமாண பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(29) பாதுகாப்பு பணிக்கு தங்களது சொந்தப் பொறுப்பில் தேவைப்படும் பணியாளர்களை நியமித்த விபரம் திருக்கோயில் நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் தங்கள் வசிக்கும் இருப்பிட எல்கைக்குட்பட்ட காவல் நிலையத்திலிருந்து நன்னடத்தை சான்று பெற்று அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு வழங்க வேண்டும். பணியாளர்களை நீக்கம் செய்த விவரத்திற்கும் புதிதாக நியமனம் செய்த விபரத்திற்கும் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

(30) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நிறுவனம் இந்து மதத்தை சேர்ந்த நபர்களால் நடத்தப் படும் நிறுவனமாகவும், நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் இந்துமதத்தை சார்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

(31) மேற்படி இடங்களில் பணிபுரியும் பாதுகாவலர்கள் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும்.

(32) பாதுகாப்பு பணிக்கு நியமிக்கப்படும் பணியாளர்கள் சீருடை அணிந்து பணிபுரிய வேண்டும்.

(33) பாதுகாப்பு பணியாளர்கள் பணிக்கு ஆஜரான நேரம் பணி முடிந்து சென்ற நேரம் குறித்து சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர் அலவலகத்தில் பேணப்படும் பதிவேட்டில் ஒப்பமிடவேண்டும். மேலும் தங்கள் சொந்தப் பொறுப்பில் **“Face Detective Machine”** ஏற்பாடு செய்து மேற்படி இயந்திரத்தில் பணியாளர்கள் வருகை பதிவு செய்யப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே மாதாந்திர பட்டியல் தொகை வழங்கப்படும். ஒரு நபருக்கு ஒரே நாளில் 2 முறை பணி வழங்கக்கூடாது.

(34) வார விடுப்பிற்கு (**Weekly Off**) தனித்தனி பதிவேடுகள் பேணி (7 நாட்களுக்கும்) அதன் விவரங்கள் மாதப்பட்டியலுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(35) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தூத்தக்குடி மாவட்ட எல்லைக்கு மட்டுமே உட்பட்ட தாகும். குறைந்தபட்ச ஊதியத்திற்கான வகைப்பாட்டில் திருச்செந்தூர் **‘C’ Zone** வகைப்பட்டைச் சேர்ந்தது.

(36) ஒப்பந்தக்காரரால், நியமிக்கப்படும் பணியாளர்கள் பணிபுரிந்தமைக்கு விடுதி கண்காணிப்பாளர் உள்துறை கண்காணிப்பாளர் ஆகியோரிடம் சான்று பெற்று பிரதி மாதம் 5ம் தேதிக்குள் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(37) பாதுகாப்பு பணியில் உள்ள பணியாளர்களுக்கு பாதுகாப்பு கருவிகள் ஒப்பந்தக் காரர் சொந்தப் பொறுப்பில் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(38) பாதுகாப்பு பணிக்கு வருபவர்களுக்கு ஒப்பந்தக்காரர் சொந்த பொறுப்பில் தங்கும் இடம் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

---5

(39) திருவிழா மற்றும் விஷேச காலங்களில் தேவைப்பட்டால் திருக்கோயில் நிர்வாகத்திடம் அனுமதி பெற்று தினக்கூலி அடிப்படையில் கூடுதல் பாதுகாவலர்கள் நியமனம் செய்து கொள்ள வேண்டும்.

(40) நிபந்தனைகளை மீறினாலோ பின்பற்ற தவறினாலோ அல்லது பணியினை சரிவர செய்ய தவறினாலோ ஒப்பந்தத்தை ரத்து செய்யும் அதிகாரம் இத்திருக்கோயில் நிர்வாகத்திற்கு உண்டு.

(41) பாதுகாவலர் பணிக்கான ஒப்பந்தம் தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

(42) அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர் திருக்கோயில் தரும் மாதிரி படிவத்தில் உள்ளதை அவரது சொந்த பொறுப்பில் ரூ.200/-மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுப்பதுடன் நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்படும் தொகையை கூடுதல் வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும்.

(43) ஒப்பந்தக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் பணியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பினால் ஒப்பந்தப்புள்ளி, வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ஏதும் திருப்பி தரப்படமாட்டாது. திருக்கோயில் நிர்வாகம் விடுவிக்கும் வரை பணியாற்ற வேண்டும்.

(44) அரசு விதிகளின்படி வருமான வரி விதிகளுக்கு உட்பட்டு பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்து திருக்கோயில் நிர்வாகத்தால் வருமானவரி கணக்கில் செலுத்தப்படும்.

(45) நிறுவன பணியாளர் திருக்கோயிலுக்கு யாரையும் தரிசனத்திற்காக அழைத்துச் செல்லுதல் உள்ளிட்ட பணப் பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

(46) தகுதிபெற்ற ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு முன் கூடுதல் முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(47) திருக்கோயில் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க தகுதியற்றவர்கள்.

(48) எந்தவித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கவோ, ஒத்தி வைக்கவோ, ஒப்பந்தப்புள்ளி திறப்பினை ரத்துசெய்யவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

(49) இதர விபரங்களையும், நிபந்தனைகளையும் திருக்கோயில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

இரா.கண்ணன் ஆதித்தன், **M.S.(USA)**
தக்கார்

சி.கல்யாணி, **M.L.,**
இணை ஆணையர்/ செயல் அலுவலர் (கூ.பொ)